பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 06 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** நாட்டை பாதுகாக்க ராணுவ பொறியியல் சேவை அதிகாரிகளின் பங்கு முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் கலாச்சாரத்தை பேணி காக்க மத்திய அரசு சேவா பர்வ் போன்ற இயக்கங்களை தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**3.** புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட **10** மாநிலங்களவை உறுப்பினர்கள் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.

**4.** வெனிசுலா நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை **164**-ஆக அதிகரித்துள்ளது.

**5.** இலங்கை ''ஏ'' அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா ''ஏ'' அணி **4** விக்கெட் இழப்பிற்கு **333** ரன் எடுத்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

நாட்டை பாதுகாக்க ராணுவ பொறியியல் சேவை அதிகாரிகளின் பங்கு முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், ராணுவ பொறியியல் சேவை பயிற்சிபெறும் அதிகாரிகளிடையே உரையாற்றியபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திறன், அர்ப்பணிப்பு, கடின உழைப்புடன் நாட்டை பாதுகாக்க முடியும் என்று நம்புவதாக கூறியுள்ளார்.

வலுவான பாதுகாப்பான இந்தியாவை உருவாக்குவதுடன் நிலையான பசுமையான நாட்டை உருவாக்க இந்த அதிகாரிகள் பங்காற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

நாட்டின் கலாச்சாரத்தை பேணி காக்க மத்திய அரசு சேவா பர்வ் போன்ற இயக்கங்களை தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் எழுதியுள்ள கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், வரலாற்று விழிப்புணர்வு மற்றும் நாட்டின் பாரம்பரியத்தை பேணி காத்து அரசியல்

சாசனத்தின் அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

சுதந்திர இந்தியாவில், இந்தியா எதிர்கொண்ட பெரும் சவால்களில் ஒன்று அவசர நிலை என்று திரு ஷெகாவத் கூறியுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>>

குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு இன்று பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

தமிழகத்திலிருந்து காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு பிரவீன் சக்ரவர்த்தி மாநிலங்களவை உறுப்பினராக பதவியேற்றுக்கொண்டார்.

தெலுகு தேசம் கட்சியை சேர்ந்த திரு சணா சதீஷ் பாபு, திரு விஜய் **Chintakayala**, திரு பாஷ்யம் ராமகிருஷ்ணா, ஜனசேனா கட்சியை சேர்ந்த திரு ரமேஷ் உள்ளிட்ட ஆந்திரப்பிரதேசத்தை சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

குஜராத்திலிருந்து பிஜேபி-ஐ சேர்ந்த ராஜேஷ் சுக்லா, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவை சேர்ந்த திரு **Baidyanath** ராம் உள்ளிட்டோரும் பதவியேற்றுக் கொண்டனர்.

<<<<<>>>>>>

ஒன்பதாம் வகுப்பு பாடப்புத்தகங்களில் அவசர நிலை குறித்த தகவல்கள் சேர்ப்பதற்கான **NCERT-**யின் முடிவை வரவேற்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவசர நிலை குறித்து இளையோர் தெரிந்துகொள்வதற்கு இது வழிவகை செய்யும் என்று கூறினார்.

**NCERT-**யின் புதிய சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் அவசர நிலை தொடர்பான அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது என்று திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சர்வதேச பிரச்சினைகளை எதிர்கொள்ள உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தென்கொரியாவில் அமைதி மற்றும் வளம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய அவர், உலக நாடுகள் ஆயுதங்களை வாங்குவது கவலையளிப்பதாக தெரிவித்தார்.

சமூக ஊடகங்களுக்கு ஏற்ப அரசியல் மாறிவிட்டதாக கூறிய அவர், தீவிரவாதம், பருவநிலை மாற்றம், கோவிட் போன்ற பிரச்சினைகளில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறினார்.

இந்தியாவும், தென்கொரியாவும் கப்பல் கட்டுமானம், சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வசுதெய்வ குடும்பகம் என்ற அடிப்படையில் உலக நாடுகள் செயல்பட வேண்டும் என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மாநில அரசுகள், கடனுதவியை பயன்படுத்தி பொதுமக்களுக்கு பயனுள்ள கட்டமைப்பு வசதிகளை அமைக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில் நிறுவனங்கள் அமைப்பதன் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்தார்.

*(Sound Byte — நிர்மலா சீதாராமன் - 51 Sec. )*

<<<<<>>>>>>

நாட்டின் பாதுகாப்பு, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாற்றியமைக்கப்பட்டு வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள தேசிய ராணுவ கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு, **Quantum** தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சியை ஒருங்கிணைந்து நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் பாதுகாப்புத்துறையில் இந்தியா மேம்பட்டுள்ளதாக கூறிய அவர், உள்நாட்டிலேயே ராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கடந்த 2014-ஆம் ஆண்டிலிருந்து, ராணுவ தளவாட உற்பத்தி 174 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

ராணுவ தளவாட ஏற்றுமதி 34 மடங்கு அதிகரித்து, தற்போது 23 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நோய் தடுப்பு மருந்து, மனநல மற்றும் மூளை நரம்பு சிகிச்சை மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ள ரசாயன கலவை குறித்து QR Code மூலம் வழங்குவதற்கு மத்திய சுகாதார அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்ட அறிவிக்கையில், மூளை நரம்பு மருந்து சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு, கூடுதல் மருந்துகளை உட்படுத்தி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது அடுத்த ஆண்டு ஜூலை ஒன்றாம் தேதிமுதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட. இத்தகைய மருந்துகளில் சேர்க்கப்பட்டுள்ள ரசாயன கலவை குறித்து QR Code மூலம் விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

<<<<<>>>>>>

தேசிய ஆசிரியர் விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேசிய ஆசிரியர் விருது இணையதளத்தில் அடுத்த மாதம் **10-**ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறையில் சிறப்பாக விளங்கிய ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஆசிரியர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>>

வெனிசுலா நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை **164-**ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அதிபர் **Delcy Rodriguez** தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு அதிபர் ஆற்றிய உரையில், அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அனைத்து பள்ளி, கல்லூரிகள் மூடப்படுவதாகவும் அவர் கூறினார்.

ரிக்டர் அளவுகோலில் 7 புள்ளி இரண்டாக பதிவான இந்த நிலநடுக்கத்தால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப், ஸ்பெயின் பிரதமர் **Pedro Sanchez,** மெக்சிகோ அதிபர் **Claudia** உள்ளிட்ட உலக நாட்டு தலைவர்கள் வெனிசுலா நாட்டுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

<<<<<>>>>>>

இலங்கை ஏ அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் **4** விக்கெட் இழப்பிற்கு **333** ரன் எடுத்துள்ளது.

தம்புலாவில் நடைபெறும் இப்போட்டியில், இந்தியா ஏ அணியின் சாய் சுதர்சன் அபாரமாக ஆடி **132** ரன் குவித்தார்.

அணித்தலைவர் **Dhruv Jurel 68** ரன்னுடனும், **Shaikh Rasheed 53** ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

------

---

உலக கோப்பை கால்பந்து போட்டிகளில் நள்ளிரவு **1.30** மணிக்கு **Curacao** அணி **- Ivory Coast** அணியையும், ஜெர்மனி — **Ecuador** அணியையும் எதிர்கொள்கின்றன.

தென்னாப்பிரிக்கா, அர்ஜென்டினா, கனடா, பிரேசில், ஜெர்மனி, மொராக்கோ, மெக்சிகோ, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட அணிகள் நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

-----------------

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Rawat — Maneesha** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

------------

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் — பிரார்த்தனா **Thombare** இணை மற்றும் ருதுஜா போஸ்லே — சீனாவின் **Fangran Tian** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

----------

பல்கேரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் — நிதின்குமார் சின்ஹா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---

-----------

ஆசிய கோப்பை வாலிபால் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

**அகமதாபாதில் இப்போட்டி இரவு 9 மணிக்கு தொடங்குகிறது.**

**<<<<<END>>>>>>**